27th August 1970]

திரு. எஸ். முத்துசாமி : தமிழாசிரியர்களாகப் பட்டம் பெறுகிறவர்கள் சென்னை, மதுரைப் பல்கலைக் கழகங்களில் படித்துப் பட்டம் பெறும் பட்டப் படிப்புக்கு, பி.ஏ., பி.எஸ்ஸி-க்கு இணையானவர்களாக ஏற்றுக்கொள்ளப்படுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி.ஆர். நெடுஞ்செழியன் : இப்போது வித்வான் பட்டம் பி.ஏ. பட்டத்திற்குச் சமம் என்று ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஆனால் வித்வான் பட்டம் பெற்ற ஆசிரியர்கள் முதல் நிலை தமிழாசிரியர்களாக, பி.டி. ஆசிரியர்களுக்கு இணையாக வைத்தெண்ணப்படுகிறார்களே தவிர, அவர்கள் 'குவாலிபிகேஷன்' பி.ஏ., பி.எஸ்ஸிக்கு இணையானது என்ற அளவுக்கு பல்கலைக் கழகத்தால் ஒப்புக்கொள்ளப்படவில்லை. ஆனாலும் தமிழாசிரியரின் பொறுப்புக்களை பி.டி. ஆசிரியர்களின் பொறுப்புக்குச் சமமானதாக வைத்திருக்கிறோம்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : உயர்நிலைப் பள்ளிப் படிப்போடு தமிழாசிரியர் பதவிக்கு வர முடியாது என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. ஆனால் அப்படி ஆசிரியர் பயிற்சியோ வித்வான் பட்டமோ இல்லாதவர்களை இரண்டாவது நிலை தமிழாசிரியர்களாக நியமிக்கலாம், நியமிக்கப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

S.S.L.C. Public Examination

*16. *Q.*—THIRU M. SANKARALINGAM PILLAI : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) whether there is any High School in our State in which no student had passed in the S.S.L.C. Public Examination in March 1969 ; and

(*b*) if so, the names of those schools ?

எஸ். எஸ். எல். சி. தேர்வு

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1969 மார்ச்சு மாதம் நடைபெற்ற எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் ஒரு மாணவருங்கூட வெற்றி பெறாத உயர்நிலைப் பள்ளிகள் நமது மாநிலத்தில் உண்டா ?

(இ) ஆம் எனில், அவற்றின் பெயர்கள் யாவை ?

[27th August 1970

மாண்புமிகு திரு. வி.ஆர். நெடுஞ்செழியன் :

(அ) ஆம்.

(ஆ) அப்பள்ளிகளின் பெயர்களாவன :

1. அரசினர் உயர்நிலைப்பள்ளி, நடுபட்டி (மதுரை மாவட்டம்).
2. அரசினர் உயர்நிலைப்பள்ளி, எரியூர் (தர்மபுரி மாவட்டம்).
3. அரசினர் உயர்நிலைப்பள்ளி, மேலதனியம், (திருச்சிராப்பள்ளி மாவட்டம்).
4. அரசினர் உயர்நிலைப்பள்ளி, கிள்ளுக்கோட்டை, (திருச்சிராப் பள்ளி மாவட்டம்).
5. அரசினர் உயர்நிலைப்பள்ளி, அநந்தவாடி, (திருச்சிராப்பள்ளி மாவட்டம்).
6. அரசினர் அரிசன உயர்நிலைப்பள்ளி, திருத்தலையூர், (திருச்சி ராப்பள்ளி மாவட்டம்).
7. அரசினர் உயர்நிலைப்பள்ளி, பூவை மாநகர், (தஞ்சாவூர் மாவட்டம்).
8. வேலுடையார் உயர்நிலைப்பள்ளி, திருவாரூர், (தஞ்சாவூர் மாவட்டம்).
9. அரசினர் உயர்நிலைப்பள்ளி, அரசங்குடி, (திருச்சிராப்பள்ளி மாவட்டம்).
10. அரசினர் உயர்நிலைப்பள்ளி, காட்டூர், (செங்கல்பட்டு மாவட்டம்).
11. நகராண்மை பெண்கள் உயர்நிலைப்பள்ளி, நாட்டுப்பிள்ளை யார் கோயில் தெரு, சென்னை-1.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பட்டியலிலிருந்து மதுரைக்கு வடக்கே உள்ள பல அரசினர் பள்ளிகளில் ஒரு மாணவர்கூட வெற்றி பெறாத நிலையில் பயிற்றுவித் திருக்கிற நிலையைப் பார்க்கிறோம். இந்நிலையை மாற்ற என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? அல்லது அந்தப் பள்ளிகள் கல்வி வளர்ச்சிக்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

4-50 p.m. மாண்புமிகு திரு. வி.ஆர். நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு கணக்குப்படி, 1969 மார்ச் மாதம் நடை பெற்ற எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதனால் எல்லா ஆண்டுகளிலும் இதே நிலை அந்தப் பள்ளிகளில் வரு கின்றது என்று கூறுவதற்கில்லை. சில பள்ளிகளில் பதினைந்து பேர்களை அனுப்புகிறார்கள். சில இடங்களில் 30, 40 என்று அனுப்புகிறார்கள். சில இடங்களில் ஆறு பேர்களை மட்டும் அனுப்பி அவர்கள் அத்தனை பேரும் வெற்றி பெற்றால் நூறு சதவிகிதம் வெற்றி என்பார்கள். மூன்று பேர் அனுப்பி மூன்று பேரும் தோற்றால், நூறு சதவிகிதம் தோல்வி என்பார்கள். நூற்றுக்கு நூறு தேர்வடைந்த பிள்ளைகள் உள்ள பள்ளிகள் 38 இருக்கின்றன. ஒருவரும் வெற்றி பெறாமல் தோல்வி பெற்ற பள்ளிகளுக்குக் கல்வி அதிகாரிகள் தனி உத்தரவு அனுப்பி, அந்தப் பள்ளிகளில் பயிற்சிகளைக் கவனிக்கிறார்கள். ஆசிரி யர்கள் சரியாக இல்லாவிட்டால், அவர்களை மாற்றவும் பிள்ளைகளுக் குத் தனியாகப் பாடம் சொல்லிக் கொடுக்கவும் ஏற்பாடு செய்து வருகிறார்கள். அதற்கான உத்தரவுகளைப் பிறப்பித்திருக்கிறார்கள்.

27th August 1970]

புலவர் ஓ. அறிவுடை நம்பி : மாணவர்களுக்குத் தனிப் பயிற்சி தருகிற ஆசிரியர்களுக்கு ஏதேனும் அரசு சிறப்பு ஊதியம் தருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி.ஆர். நெடுஞ்செழியன் : ஏற்கெனவே சரியாகச் சொல்லிக் கொடுக்காத குற்றத்திற்காக அவர்களுக்குத் தண்டனை வழங்காமல் இருப்பதே பெரிய பாக்கியமாகும். அவர்கள் சரியாக நடத்தவில்லை என்பதற்காகத்தான் தனி வகுப்புகள் நடத்த வேண்டியிருக்கிறது.

திரு. எம். ராஜா அய்யர் : துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் தந்த பட்டியலிலிருந்து தெரிவது என்னவென்றால் ஒரு மாணவரும் தேறாத பள்ளிகள் பெரும்பாலும் அரசினர் பள்ளியாகவோ, நகராண்மைப் பள்ளியாகவோதான் இருக்கின்றன. இதைப்போல தனியார் பள்ளிகளில் இருப்பதில்லை. அதற்கான காரணங்களை ஆராயும்போது, தனியார் பள்ளிகளில் இருக்கிற வசதிகள் அரசினர் பள்ளிகளில் கிடைக்காமல் இருக்கின்றன. குறிப்பாக ஆசிரியர்கள் தனியார் பள்ளிகளில் ஒரே இடத்தில் பணியாற்றுவதால் அவர்கள் பள்ளியோடு ஐக்கியப்பட்டு ஒன்றி தங்கள் கருத்தை ஊன்றி பணியாற்ற வாய்ப்பிருக்கிறது. அரசினர் பள்ளி ஆசிரியர்களுக்கு அது இல்லை. அவர்கள் அடிக்கடி மாற்றலுக்கு ஆளாகிறார்கள். ஆகையால் தனியார் பள்ளிகளில் உள்ள சலுகைகளை வாய்ப்புகளை அரசினர் பள்ளி ஆசிரியர்களுக்குத் தருவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. வி.ஆர். நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பட்டியலில் ஒரு தனியார் பள்ளிக்கூடம் இருக்கிறது. இரண்டு பள்ளிகளுக்கும் மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப்போல, சில பல வித்தியாசங்கள் இருக்கின்றன. தனியார் துறையில் அவர்கள் தங்களுக்கு வேண்டிய தகுதிபெற்ற ஆசிரியர்களைப் போட்டுக்கொள்ள வாய்ப்பிருக்கிறது. மற்ற இடங்களில் பணியாற்றும் நல்ல திறமை மிக்கவர்களை தங்களிடம் வாருங்கள் என்று அழைத்துக் கொள்கிறார்கள். அரசினர் பள்ளிகளில் அப்படி அல்ல. படித்து ஆசிரியர் தகுதி பெற்ற அனைவரும் விண்ணப்பிப்பார்கள். அவர்கள் அனைவரையும் அழைத்து வேலை கொடுக்க வேண்டியிருக்கிறது. யார் யார் வருகிறார்களோ அத்தனை பேரையும் அழைத்து, அவர்கள் எதை விரும்புகிறார்களோ அதைத் தந்து யாரை அழைத்துக்கொண்டு வந்து எந்த இடத்திற்குப் போக வேண்டுமென்று சொல்கிறார்களோ, அங்கே அனுப்பப்படுகிறார்கள். தனியார் பள்ளிகள் சம்பந்தப்பட்டவரை, ஆசிரியர்கள் நிரந்தரமாக 30 அல்லது 35 ஆண்டுகள் ஒரே பள்ளியை விட்டு நகராமல் இருந்து சொல்லிக்கொடுக்கிற வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். இடையிடையே வேறு ஊர்களுக்கு அவர்களை மாற்றுகின்ற நிலை இல்லை. அவர்கள் ஒரே ஊரில் இருக்கலாம். அங்கே வீடு வாங்கிக் கொள்ளலாம். எருமை மாடு வாங்கிக் கட்டிக் கொள்ளலாம், ஒரே இடத்தில் தங்கலாம் என்ற நிலைமை ஏற்படுகிறது. அரசினர் பள்ளிகளில் நூற்றுக்கு நூறு வெற்றிபெறும் பள்ளிகளும் இருக்கின்றன. நல்ல முறையில் இயங்காத பள்ளிகள் பேரில் கல்வித் துறை மூலமாக என்னென்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதையெல்லாம் எடுத்து வருகிறோம்.

[27th August 1970

DEPUTY CHAIRMAN : Now we have used one full hour for the questions. I want to know whether the House permits the question hour to be continued for another ten minutes so that we may finish the supplementaries and another two questions.

HON. MEMBERS : Yes.

DEPUTY CHAIRMAN : Supplementaries are continued.

திரு. டி. கே. சுப்பையா : அமைச்சர் தெரிவித்த 'லிஸ்ட்' படி மிகவும் பின் தங்கிய பகுதியில் ஆசிரியர்கள் குடியிருந்து பள்ளிகளை நடத்தாததால்தான் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை அரசு உணருமா? அதைப் பரிசீலனை செய்து ஆசிரியர்கள் அங்கேயே தங்கியிருந்து கல்வி போதிக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவதும் ஒரு வகையான காரணம்தான். ஆங்காங்கு ஆசிரியர்கள் இருந்து பயிற்றுவிப்பதற்கான வாய்ப்பு ஏற்படுத்தித்தர வேண்டியதுதான். இப்போது பெண் ஆசிரியைகளுக்கு அந்த வாய்ப்பினை ஏற்படுத்தித் தர வேண்டுமென்பதுதான் அரசின் கொள்கை. அதைக்கூட ஏற்படுத்த முடியாத அளவிற்கு இருக்கிறோம். ஒரு யூனியன் முழுவதும் ஒரு ஆண்டிற்கு ஐந்து பெண் ஆசிரியைகளுக்கு இடம் ஏற்படுத்திக் கொள்ளும் அளவில்தான் நிதி ஒதுக்கப்படுகிறது. பொது மக்கள் ஒத்துழைத்து அங்கே ஆசிரியர்கள் வரும்போது குடியிருக்க இடம் ஒதுக்கி வசதி செய்து கொடுக்க வேண்டும். அப்போதுதான் அவர்களும் நல்ல முறையில் சொல்லிக் கொடுப்பார்கள். ஆசிரியர்களுக்கு வீடு கட்டித்தர வேண்டுமென்ற எண்ணம் இருப்பதால், அதற்கான நிதி வசதி வரும்போது அதைச் செய்வோம். எப்படியிருந்தாலும் தலைமை ஆசிரியர் திறமையைப் பொறுத்துத்தான், அவர்கள் காட்டுகிற ஊக்கத்தின் பேரில்தான், அந்தந்தப் பள்ளிகளில் நல்ல நிலைமைகள் உருவாகின்றன. ஆகையால் ஆங்காங்குள்ள தலைமை ஆசிரியர்களும் இதில் அக்கறை கொள்ள வேண்டுமென்று அவர்களுக்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. டி. சந்தோஷம் : மிகவும் ஆணித்தரமான புள்ளி விவரங்கள் குறிப்பாக அரசினர் பள்ளிகளில்தான் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுகின்றன என்பதைக் காட்டியபோதிலும், அமைச்சர் அவர்கள் மிகவும் திறமையாக விமர்சனம் கொடுத்து, அந்த ஆசிரியர்களைப் பாதுகாக்க முயற்சிக்கிறார்கள். தனியார் பள்ளிகளில் ஏற்படாத நிலைமை அரசினர் பள்ளிகளில் ஏற்பட்டிருக்கிறது. தனியார் பள்ளிகளில் இதுபோன்று தவறுகள் நடந்தால், அங்கே உடனே நடவடிக்கை எடுக்கப்படுகிறது. திறமையாய்ச் சொல்லிக் கொடுத்து மாணவர்கள் நல்ல முறையில் தேர்ச்சி பெறும்போது, அந்த ஆசிரியர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். ஏதாவது இனம் தரும் வகையில் அவர்களுக்கு ஊக்கம்அளிக்கப்படுகிறது. அதைப்போல, அரசினர் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்கள் தவறும்போது, தண்டனை அளிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். நல்ல முறையில் பணியாற்றும்போது அவர்களுக்கு ஊக்கம் தர வழி செய்ய வேண்டும். அதை அரசு அமுலாக்குமா ?

27th August 1970]

மாண்புமிகு திரு. வி.ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இவற்றை யெல்லாம் கண்காணிக்க வைக்கப்பட்டிருக்கிற அமைப்பு சரியாக இருக்கிறது. அதற்கான அதிகாரிகள் இருக்கிறார்கள். அவரவர்கள் தங்களுடைய கடமையைத் திறம்படச் செய்யும்போது இவை நிறைவேற முடியும். சில பள்ளிகள் சிறப்பாக இருப்பதற்குக் காரணம் தலைமை ஆசிரியர்கள் எடுத்துக்கொள்கிற ஊக்கமும் முயற்சியும்தான். பள்ளிகளைக் கண்காணிக்க இன்ஸ்பெக்டிங் ஆபிசர்கள் இருக்கிறார்கள். டி.இ.ஓ. இருக்கிறார். அதற்குமேல் சி.இ.ஓ. இருக்கிறார். அவர்கள் ஆண்டுக்கு ஒரு முறை பள்ளிகளுக்குச் சென்று வகுப்புகள் நடைபெறுகின்ற விதத்தைக் கண்காணிக்க வேண்டும். அவற்றில் தவறு இருந்தால், அவர்கள் அவற்றைக் கண்டு அதற்கான தண்டனை கொடுக்கலாம் என்றுகூட சட்ட திட்டங்கள் இருக்கின்றன. ஆகையால், குறைபாடுள்ள பள்ளிகளைத் தனியாக எடுத்து என்னென்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை மாவட்டக் கல்வி அதிகாரிகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள விவரப்படி சுமார் 11 பள்ளிகளில் எஸ்.எஸ்.எல்.சி. வகுப்பில் ஒருவர் கூட தேர்வு பெறவில்லை என்று தெரிகிறது. இந்த ஆண்டு மட்டும் இந்த விசேஷ நிலை இருக்காது என்று நினைக்கிறேன். இதே போன்று சென்ற ஆண்டும் பல பள்ளிகளில் ஒரு மாணவர்கூட தேறாமல் இருந்திருக்கலாம். அவை எத்தனை பள்ளிகள் என்று தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. வி.ஆர். நெடுஞ்செழியன் : இந்த ஆண்டு கணக்கு வரவில்லை. 1969 மார்ச் திங்களில் எழுதப்பட்ட எஸ்.எஸ்.எல். சி. தேர்வில்தான் இப்போதுள்ள நிலை இருக்கிறது. 1968-ம் ஆண்டில் 4 உயர்நிலைப் பள்ளிகளிலும், 1967-ல் இரண்டு உயர்நிலைப் பள்ளிகளிலும் 1966-ம் ஆண்டு இரண்டு உயர்நிலைப் பள்ளிகளிலும், இந்த நிலைமைகள் இருந்தன. 1969-ல்தான் 11 உயர்நிலைப் பள்ளிகள் இடம் பெற்றிருக்கின்றன.

திரு. சி.வி. ராஜகோபால் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும்போது, இந்தக் கல்வி நிலையை ஆராய்ந்து பார்ப்பதற்காக டி.இ.ஓ., சி.இ.ஓ. இவர்கள் எல்லாம் இருக்கிறார்கள் என்றும், இருந்தாலும் சில பள்ளிகளில் ஒரு மாணவர் கூடத் தேறவில்லை என்றும் கூறினார்கள். ஒரு பள்ளியில் 40 மாணவர்கள் தேர்விற்குச் சென்றாலும், அந்த 40 பேரும்கூட சில சமயம் 'பாஸ்' செய்வதில்லை என்றும் கூறினார்கள். இது ஆசிரியர்களின் திறமைக் குறைவினால்தான் ஏற்படுகிறது. ஆகையால் அந்த 40 மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுத்த ஆசிரியர்களுக்கு தண்டனை வழங்கப்படுமா ? அல்லது அது முடியாவிட்டால், அந்த 40 மாணவர்களுக்காவது ஒரு வருஷம் தண்டனை வழங்குவார்களா இந்த அரசு என்று அறிய விரும்புகிறேன். (சிரிப்பு)